(3) உற்பத்தி.
(4) உருவமைப்பு மற்றும் வரைவுநுட்ப இயல்.
(5) தொழிற்சாலை நுட்ப இயல்.
(6) மின் அணு இயல்.
(7) மருத்துவக் கருவி நுட்ப இயல்—மேல் பட்டையப் படிப்பு.

திருப்பூர் நகராட்சிமன்ற உயர்நிலைப்பள்ளிகள்

* 529 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்ற நிர்வாகத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என அந்த நகராட்சி மன்றத்திடமிருந்து 1970-ம் ஆண்டில் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) வந்துள்ளது.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, "இது அரசின் பரிசீலனையில் உள்ளது" என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருப்பூர் நகராட்சியைப் பொறுத்த வரையில், நான்கு உயர்நிலைப்பள்ளிகளை அது நிர்வகிக்கவேண்டி உள்ளது. அதனால் நகராட்சிக்குப் பெரும் செலவு ஏற்படுகிறது. ஆகவே, அந்த உயர்நிலைப்பள்ளிகளை அரசாங்கம் விரைவில் எடுத்துக்கொள்ள முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நகராட்சிப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முறையீடுகளைப் பெரும்பான்மையான நகராட்சிகள் செய்து வருகின்றன. முதலில் அவர்களுடைய செலவினத்தில் 50 சத வீதத்தை நகராட்சி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், 50 சத வீதத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நிலைமை இருந்து வந்தது. பிறகு அவர்கள் நிதிப் பற்றுக்குறை என்று தெரிவித்துக்கொண்ட காரணத்தால், 66-2/3 சதவீதத்தை அரசு ஏற்றுக்கொண்டு, 33-1/3 சத வீதத்தை நகராட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது. அரசு தரும் தொகையை மேலும் உயர்த்த வேண்டும் என்று நகராட்சியினர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மூன்று வகையில் ஏதாவதொன்றைச் செய்யலாம் என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அதாவது, (1) எல்லா நகர மன்றப் பள்ளிகளையும் அரசே ஏற்று நடத்துவது; (2) அரசு கொடுத்துவரும் 66-2/3 சத வீத மானியத்தை 80 சத வீதமாக உயர்த்துவது ; (3) நிதி நிலை போதிய அளவு இல்லாத நகர மன்றங்கள் நடத்துகின்ற உயர்நிலைப் பள்ளிகளை "ஃபேஸ்டு

1971 ஜூலை 29]

ப்ரொக்ராம்"-இல் அரசு எடுத்துக்கொள்ளுவது. அதாவது "ஸிக் முனிசிபாலிடி" என்ற நிலையில் உள்ள நகர மன்றங்களின்கீழ் இருக்கும் உயர் நிலைப்பள்ளிகளை அரசு மெல்ல மெல்ல எடுத்துக் கொள்ளலாமா என்ற முயற்சி இருக்கிறது. நிதி நிலையைப் பொறுத்து அரசாங்கம் விரைவில் அவற்றினை எப்படி எடுத்துக் கொள்வது என்று யோசித்து, எடுத்துக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : நகராட்சிமன்றங்களின்கீழ் இயங்கும் உயர்நிலைப் பள்ளிகளை நிதிநிலையைப் பொறுத்து எடுத்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருப்பூர் நகரமன்றத்திற்கு நிதிப் பற்றுக்குறை இருப்பதால், முதன் முதலாகத் திருப்பூர் நகரமன்றத்தின்கீழ் உள்ள உயர்நிலைப்பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைவிட மிக மிக மோசமான நிதி நிலையிலுள்ள நகரமன்றங்களும் இருக்கின்றன. மொத்தத்திலே நிதி நிலையைப் பொறுத்து எடுத்துக்கொள்ளப்படும் உயர்நிலைப்பள்ளிகளில், திருப்பூர் நகர மன்ற உயர்நிலைப்பள்ளிகளும் அடங்கும் என்றால் அடங்கும். அடங்காது என்றால் காலம் தாழ்த்தித்தான் எடுத்துக்கொள்ள வேண்டிவரும்.

திரு. கே. என். குமாரசாமி : நகரமன்றங்கள் கல்வி வரி என்று விதிக்கும் போது, அதிலிருந்து வருகிற பணமே ஆசிரியர்களுக்குப் போதுமானதாக உள்ளது. என்றாலும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் அரசாங்கமே அவற்றினை எடுத்துக்கொள்ளச் சொல்கிற கருத்து இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கல்வி நிதி என்று இருந்தாலும் நகர மன்றத்தின் பொது நிதியிலிருந்தும் கல்விக்காக அதிகம் செலவழிக்க வேண்டி வருகிறது. துவக்கப்பள்ளிக் கல்விப் பொறுப்பை நகரமன்றங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டியிருப்பதால், உயர்நிலைப் பள்ளிகளை நிர்வகிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தங்களால் இயலவில்லை என்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே நான் குறிப்பிட்ட மூன்று வகைகளில் ஏதாவதொன்றை மேற்கொள்வதுபற்றி முடிவு செய்து, அதன்பேரில் நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

குறிச்சி பேரூராட்சிப் பகுதியில் உயர்நிலைப்பள்ளி

*530 வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு கல்வி–உள்ஆட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி மன்றப் பகுதியில் ஓர் உயர்நிலைப்பள்ளி தொடங்க ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?